The Librarian,
University of Jaffna.

*News and Articles in Tamil and English Please send them to:*

THE EDITOR,

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka

Under No.Q / J / 104 / News / 89

*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*

Vol: 155 Jaffna, Friday 21, October 1994 No. 24

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs.100/-
*For Advertisements*

*Apply to:*
THE MANAGER

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

## Winds of Peace Starts Blowing

The long awaited peace talks between government representatives and the Tamil Tigers took place on the 13th and 14th of October. The government team led by Mr Palapatti Pendi, a lawyer by profession,alsoPersonal Secretary to the Prime Minister Chandrika consisted of three others, namely;- Mr. Lionel Fernando, Minister of Communications,Tourism and Air travel former Government Agent of Jaffna and later Administrator of the North Eest Provincial Council, Mr. N Rajan Asseervatham, Chairman of the Bank of Ceylon, a renowned Accountant and a Rotarian and Mr. Gunaratne,Director of the Consotamil ofAchitects.TheTamilTigers were represented by Messers. K. Karikalan - Assistant Political Organiser of Tamil Eelam, C. Ilamparuthy - Political organiser of the Jaffna District, S. Dominic - Administrative Organiser of Tamil Eelam, and A Ravi-Organiser of Development and Economic affairs of Tamil Eelam.

The helicopter transporting the government team landed on the helipad in the premises of the Jaffna University on time on the 13th of October and the visitors were received by Dr. Anton Balasingham Political Advisor of Tamil Tigers, Mr. S. P. Tamil Selvan Chief Political Organiser of Tamil Eelam and Miss Mary Perkins, represntative of I C R C in Jaffna and a crowd of people.

The talks took place in the Special Conference of the Administrative Centre of Tamil Ealam in Chundikuli and proceeded in a friendly and understanding manner. During the discussions importance was given to a) the difficulties the Tamil people face daily b) the opening of a roadway or route namely Pooneri - Changupidy route for travel from the North to the South and vice versa. c) Gradual cessation of hostilities leading to ceasefire (d) Restoration of Essential services eg: communications and Electricity supply, and renovations of road ways and damaged buildings specially that of hospital and schools. It was also discussed as to whether food and other essential items can be made available to the people of the North at a cheaper price.

After the talks which according to reports were successful and satisfactory, the two teams took part in a press conference with numerous reporters (represnting Reuter, B. B. C., SLBC, Rupavahini and Ceylon News Papers) who had arrived in Jaffna on the 13th.

The government representatives were shown the damaged Jaffna Library, Veerasingham Hall and the memorial erected for those killed by the Police during the World Tamil Conference held in Jaffna years ago. It was suggested that the government should be requested to rebuild the Jaffna Public Library that was destroyed by the Army in 1981.

The visiting team since it had no authority to take any decisions over the matters discussed, left for Colombo on the evening of 14th October, promising to meet the Prime Minister and later the High ranking Officers of the Armed Forces regarding the ceasefire and opening of Pooneri-Changupiddy Route.

As this goes to press it has been reported that the second stage of the Peace Talks will

(Gontinned to pag 4)

### WHITE CANE DAY

15th of October was observed as White Cane Day world over. Observance of White Cane Day was organized 25 years ago in U. S. A. by the Lion's Club of U. S. A.

The Leo Club of Jaffna College, organized observance of white Cane Day at Jaffna College on Monday the 17th October. Mr. A. Parameswaran the Secretary of Jaffna Association of the Visually Handicapped addressed the staff and students at the Assembly. Mr. Parameswaran, himself visually

(Continued to page 4)

### World Environment DAY

16th October was observed as as the Environment Day. This year's theme was "Water for Life". Let us learn to conserve watet.

### George Arney of B. B. C. Interviews Prime Minister Chandirika

After the Peace talks the Prime Minister was interviwed by Mr. Goge Arney of B.B.C. She had said that the peace talks were successful and she hopes to meet Mr. V. Prabakaran soon. She also said " No guerilla Movement can exist without the support of the People and she knows that the Tigers have the support of the People of Jaffna. The People of Jaffna despartely want Peace and therefore they can influence the Tigers and bring about a change. The army doesn't oppose of a ceasefire. But it is the government in power that rules and not the army. Previous negotiations for peace failed because of the armed forces. "

She was asked then how govern ment proceeded to hold the Peace talks in spite of the sinking of a big naval ship by the Tigers only last month. She replied that this must have been a retaliation to the killing of several Tigers in the Eastren Province by the army.

(Conttnued to page 4)

### NOB.L PRIZE FOR PEACE

Nobel Prize for Peace has been awarded to the Leader of the Palestinian Liberation Orgaanaization, Yasser Arafat, Israel Prime Minister Idshaq,Rabin and Minister of Foreign Affairs Simone Perez.

### INDIA BREAKS INTO THE INTERNATIONAL MARKET

India breaks into the international market, by successfully launching its second satellite, fixed from a rocket, in Sri Hari Kotta, off the border of Tamil Nadu, on Friday 14th of October; and has also reached another milestone. India is now the sixth country in the world, and second to China, in the developing world in launching a satellite. The elite countries are America, Russia, France and Japan The Satellite weighs 870 Kgs. and is in the earth's orbit; everything is going well with it. This achievement comes, at the end of twenty years efforts, and there has been great rejoicing over the launching. Dr. K. Kusturi Ranjan, the Scientist leading this programme, reported to have said, that the launching went off according to textbook precision. India hopes to launch another satellite next year.

### Jordan and Israel made peace

The King Hussein of Jordan and Idshaq Rabin have made a peace pact. Israel has withdrawn from Sina lanas belonging to Jordan. "

### BISHOP RT REV. DR S. JEBANESAN LEAVES FOR EUROPE AND AMERICA

Our Bishop, The Rt.Rev. Dr. S Jebanesan, left for Europe and America on the 13th of October. He will attend meeting in London, Stutgart, Boston and California. He is expected to return on the 2 nd of November, 1994'

# தமிழ்ப் பண்பாட்டு மரபும் இறிஸ்தவமும்

தமிழ்க் கலாசாரம் தமிழினத்தின் முதுசம் எனலாம். தமிழ் இனத்தின் ஒவ்வொருவனும் அந்தக் கலாசாரத்தின் பின்னணியில் வளர்ந்து வருபவன். அவன் கிறிஸ்தவனாயினும், இந்துவாயினும், கத்தோலிக்கனாயினும் அப்பண்பாட்டில் மூழ்கியவன். மனித இனம் கூடிவாழும் தன்மையுடையது. இதனாற் சில பண்புகளின் அடிப்படையான ஒற்றுமைக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தன்மை கொண்டது அதே நேரம் சமயக் கோட்பாட்டு நம்பிக்கைகளில் வேறுபட்டு நிற்பதையும் உணர முடிகிறது. ஆயினும் அனைவரும் தமிழ்த் தாயின் பிள்ளைகள் என்பதை மறுக்க முடியாது.

ஒரு சமுதாயம் பழக்கவழக்கங்கள் எளிதில் மாறமுடியாதவை இதனால் தமிழ் மண்ணில் வாழும் கிறிஸ்தவர்கள் சமய நம்பிக்கைகளில் வேறுபட்டாலும், வாழும் மண்ணால் பேசும் மொழியால், உணர்வால் பழக்கவழக்கங்களால் சமுதாய நம்பிக்கைகளால், நாகரீகத்தால் வேறுபடாதவர்கள் என்பதை ஏற்க வேண்டியதாகும். எனவே தமிழர் பண்பாடு தமிழ்க் கிறிஸ்தவர்களில் பதிவது தவிர்க்க முடியாததாகும்.

பண்பாடு என்றால் என்ன? அது ஒரு மனித குழுமம் கற்றறிந்து கொண்டவற்றினதும் அது குறியீடுகளாகக் கொண்டவற்றினதும் தொகுதி எனலாம். இது மொழி, வழக்கு, பாரம்பரியம் என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்கும் மொழி ஒரு பண்பாட்டின் வெளிப்பாடாகவும், பண்பாட்டிற்கு வேண்டிய நிபந்தனையாகவும் இருக்கும் என அறிஞர் கூறுவர்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் தமிழ்ப் பாட்டில் கிறிஸ்தவம் என்னும் நூலில் "தமிழன் தனது நிலைப்பாடுகளை வெளிப்படுத்திய ஒரு வாகனமாக இந்த மொழி அமைந்ததால், இந்த மொழி மதங்களுக்கு அப்பாற்பட்ட, மதங்களை உள்ளடக்குகின்ற ஓர் ஒருமைப்பாட்டினைக் கொண்டதாகப் போற்றுவது அத்தியாவசியமாயிற்று இதுவும் Language culture concept தோன்றக் காரணம்" எனக் குறிப்பிடுகிறார். எனவே சமயச் சார்பற்ற (Seculas) ஒரு தமிழ்ப் பண்பாடு உண்டு என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனை தந்தை தனிநாயகம் அடிகளார் அழுத்திக் கூறியுள்ளார்.

அருட்தந்தை. கலாநிதி. ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் தன் கருத்தினைக் கூறும் போது "சமயங்களைச் சார்ந்து வளராத பண்பாடுகளையும், பண்பாடுகளைப் பக்குவப்படுத்தாத சமயங்களையும் மானிட வரலாற்றில் எந்தவொரு சமுதாயத்திலும் காண்பது அரிது" என்கிறார். தில்லிக் என்ற இறையியல் அறிஞர் "சமயம் பண்பாட்டின் சக்தி வாய்ந்த சாரம், பண்பாடு சமயத்தின் பயன்தரு தோற்றம்" என்கிறார்.

மரபுகள் (Tradition) மனித வரலாற்றுடன் ஆரம்பமானது. ஆயினும் அவை காலந்தோறும் புதிய கருத்துக்களைத் தன்னுள் அடக்கி கொண்டது. சிலர் கருத்துப்படி ஒரு சுதந்திர சமூகத்திற்கு மரபுகளும் — நவீனத்துவமும் அவசியம் என்பர். மரபுவழிக் கருத்துக்களை நாம் முற்றாக ஒதுக்கிவிட முடியாது. மரபின் தன்மையை சில அறிஞர்கள் மூன்றாக கூறுவர்.

1. கடந்த காலத்தோடு அது கொண்ட தொடர்பு
2. அதனுடைய மாறுபடாத தன்மை,
3. அவற்றைப் பிரமாணமாக மற்றவர் கொள்ளுதல்

எனவே மரபு மாற்றம் அடைவதில்லை. ஆயினும் அது சமூகம் ஏற்கக்கூடிய சில புதுமைகளை உள்வாங்கியும் கொள்கிறது உதாரணமாக தமிழ்த் திருமண வீட்டில் விருந்தின் போது பந்தியிருத்துவது மரபு. ஆனால் கொழும்பு நகரில் வாழும் தமிழர் பந்தியிருத்துவதும் வசதியில்லாமையாலோ அல்லது வேறு தனிப்பட்ட காரணத்தாலோ விருந்துபசாரத்தினை Garden Party யாக அல்லது Hotel Party யாக வைக்கிறார்கள் இங்கு மரபு புதியவற்றையும் ஏற்றுக்கொள்ளும் பண்புடையதாகும்.

பரம்பரை பரம்பரையாகத் தமிழ்ப் பண்பாட்டுடன் பின்னிப் பிணைந்து வாழ்ந்த தமிழ்த் திருச்சபை கிறிஸ்தவர்கள் பல தமிழ்க் கலாச்சார மரபுகளைப் பின்பற்றுவது தவிர்க்க முடியாததாகும். இவற்றுட் சிலவற்றை நோக்குவோம்.

சடங்குகள் :

சடங்குகள் மரபு வழிபட்ட செயல்முறைகளை அடிப்படையாகக் கொண்டவை அவற்றுட் சில.

1 சாதகம் குறித்தல்
2 நிறைகுடம் வைத்தல்
3 நிமித்தம் பார்த்தல்
4 பந்தியிருத்தல்
5 சாத்திரம் கேட்டல்
6 திருட்டி கழித்தல்
7 பல்லி சாத்திரம் பார்த்தல்

வேதநாயகம் சாத்திரியாரின் சாத்திரக் கும்மி என்ற நூல் கிறிஸ்தவ சமுதாயத்தில் காணப்படும் பல சாத்திரங்களையும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் எடுத்துப் கூறுகிறது.

## திருமணச் சடங்குகள்

தமிழ்க் கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் தங்கள் திருமணங்களை நல்ல நாட் குறித்தே நடாத்துகின்றனர். பெண்பார்த்தல் சம்மந்தங் கலத்தல், பொன்னுருக்குதல் கூறை எடுத்தல், நாட்பலகாரம சுடுதல், நாலாஞ் சடங்கு செய்தல், போன்ற தமிழ்க் கலாச்சார நிகழ்வுகளை செய்கின்றனர். தாலியிற் சிலுவை திருமறை புறா போன்ற சின்னங்களைப் பொறிப்பர். சில இடங்களிற் தாலி கூறை மோதிரம் போன்ற பொருட்களுடன் வெற்றிலை, பாக்கு மஞ்சள் பூ போன்ற பொருட்களையும் தட்டில் வைத்து சபைக்குருவிடம் ஆசீர்வாதத்திற்காகக் கொடுப்பர் மணமக்கள் ஆலயத்திற்குப் புறப்படும் போதும் தாலி கட்டி வீட்டிற்குத் திரும்பும் போதும் ஆராத்தி எடுப்பதும். மலர்மாலை அணிவதும் தமிழர் மரபாகும். சிலர் தமிழ்க் கிறிஸ்தவர்கள் புதுமணத் தம்பதிகளுக்குப் பூதாக்கலம் செய்வதும் உண்டு திருமணத்தில் பந்தி கலத்தல், கால் மாறுதல், மாப்பிளைத் தோழன் காலுக்கு நீர் ஊற்றுதல் மாப்பிளை தோழனுக்கு மோதிரம் அணிவித்தல் போன்ற தமிழ் மரபுகளையும் இன்றும் பின்பற்றுகிறார்கள்

மணமக்கள் மங்களமாக வாழ வேண்டுமென வாழ்த்தும் நோக்கு முகமாகவே நிறைகுடம் வைத்தல் குத்துவிளக்கேற்றுதல், ஆராத்தி எடுத்தல் போன்ற தமிழ் மரபுகளைத் தமிழ்க் கிறிஸ்தவர்களும் கடைப்பிடிக்கிறார்கள் இவை சமயக் கலப்பில்லாத பண்பாட்டு மரபினையுடைய வெறும் சம்பிரதாயங்கள்

## நல்ல நாட் பார்த்தல்

இது தொன்று தொட்டு வரும் மரபு காரணம் - இனத்தவர்களும் சம்பந்தி வீட்டாரும் நண்பர்களும் ஒன்று கலந்து மகிழும் மங்கலமான திருமண நாளில் மழையோ இருட்டோ இருக்காது நல்ல காலச் சூழலை எதிர்பார்த்தே நாட்பார்க்கிறார்கள்.

திருமதி கே. பவசிங்கம்
(B. A. Dip. in. Education)

(தொடரும்)

# பெண்களின் பிரச்சனைகளும் இறைமக்கள்பொறுப்பும்

## திருமறையில் பெண்கள்

பெண்ணடிமைத்தனமும் பெண்ணின் இழிநிலையும் சமுதாய மரபுச் சூழலோடு மட்டும் தொடர்புடையது அன்று திருமறையிலும் பங்கு உண்டு என்பதையும் அறிதல் வேண்டும் பிலிஸ் பெர்ட் (phyllis Bird) என்பவர் திருமறை ஒரு ஆண்களின் நூல் (Men's Book) என்றும் அறிஞர் பெர்னாட்ஷா 'பவுல் பெண்ணினத்தின் பெரும் பகைவன்'' என்று கூறுவதிலும் பொருள் உண்டு கடவுள் தம் உருவில் மனிதனைப் படைத்தார். கடவுளின் உருவிலே அவனைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாகவே அவர்களைப் படைத்தார் (ஆதி 1. 27) இப்பகுதியில் காணப்பெறும் செய்தி இருவரும் தேவ சாயலாகவே படைக்கப்பட்டனர் என்னும் கருத்தை வலியுறுத்துகின்றது. ஆனால் ஆதியாகமம் இரண்டாம் அதிகாரம் ஆணிலிருந்து பெண் படைக்கப்பட்டாள் என்று கூறுகின்றது.(ஆதி 2.18-22) பவுலடியார் ஆதியாகமம் இரண்டாம் பகுதியிலிருந்தே புரிந்து கொண்ட கருத்தைத் தம் திருமடல்களில் வற்புறுத்துகின்றார். (கொரி 11:8:9 - 1தீமோ 2:13)முதலாவது கதை ஆண் ஆதிக்க மரபு வழிச் சமுதாயத்திற்கு ஏற்புடைது அன்று. ஆதலால் மறைக்கப்பட்டது ஆகையால் இரண்டாவது கதையே தொடர்கிறது. ஆட்டுக்குட்டியானவருடன் லட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் இருந்தனர் என்றும் அவர்கள் ஸ்திரீயினால் தங்களை கறைபடுத்தாதவர்கள் என்றும் கூறப்படுகிறது. (தரி 14: 4) இதனால் இக்கூட்டத்தில் மகளிர் இல்லை என்பதும், மளிரோடு தொடர்பு கொண்ட ஆடவனும் இத்தொடர்பினால் அக்கூட்டத்தில் சேரும் தகுதியை இழந்தான் என்பதுவும் புலப்படுகின்றது.

திருமறையில் காணப்படும் சமூக அமைப்பிலும் பெண் ஒரு உடைமைப் பொருளாகவேகாணப்படுகின்றாள் (யாத் 2:17) (உபா 5:21) இது அன்னதானம் வஸ்திரதானம்,கோதானம் முதலிய தானப் பொருட்களுடன் கன்னிதானத்தில் ஒரு பெண்ணும் தானப் பொருளாகவே கருதப்படும் இந்து சமயக் கொள்கைக்கு ஒத்ததே திருமறையில் ஆணுக்கு வற்புறுத்தப்படாத கற்பு பெண்ணுக்கு வற்புறுத்தப்பட்டது. ஒழுக்கம் தவறும் பெண் கல்லெறிந்து கொல்லப்பட்டாள். (உபா 22:13-21) பிள்ளை பேற்றில் கூடப் பெண்பிள்ளை பேற்றிற்குத் தீட்டு நாட்கள் அதிகமாக்கப்பட்டன. (தொகுப்பு: ART)

(தொடரும்)

**தாரகை ஒளி**

கோபம் வரும்போது மனிதனிடம் இருந்து பகுத்தறிவு விடைபெறுகின்றது.

# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை

Estd. 1841

மலர்: 155 21 - 10 - 1994 இதழ்: 24

## சமாதானப் பேச்சு வார்த்தை

இனப்பிரச்சனை தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தை திட்டமிட்டவாறு இரண்டு நாட்கள் சுமூகமாகவும் நட்புறவு ரீதியில் நடந்தேறியுள்ளது இந்த ஆரம்பப் பேச்சு வார்த்தை பெரு வெற்றியளித்தது என அரசாங்கக் குழுவின் தலைவர் பால பட்த பென்டி கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

*1983* ஜுன் இனக்கலவரம் முடிந்த பின்பு இந்த அரசின் ஆலோசனையின்படி தொடங்கிய பேச்சு வார்த்தை காலம் மாறி திசை மாறி கொழும்பு சென்னை பெங்களுர் டில்லி திம்பு என்று இழுபட்டு மீண்டும் கொழும்புக்கு வந்து 1990 ஜுன் வரை நடைபெற்றது. இதன் விளைவுகள் நாம் அறிந்ததே காலம் கடத்தப்பட்டது, தமிழர்கள் ஏமாற்றப்பட்டனர். இந்த ஏமாற்றத்தை சகிக்க முடியாத விடுதலைப் போராளிகள் இனப்பிரச்சனைக்கு நிரந்தர முடிவுகாண திடமனதோடு போர்க்களத்தில் மீண்டும் குதித்தனர்.

போர் நிறுத்தத்திற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் உடன்பட்ட போதிலும் இலங்கை இராணுவம் இணங்காதபடியால் போர் தொடர்ந்து நடைபெறுகிறது. இந்தச் சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான முதற்கட்ட சமாதானப் பேச்சு வார்த்தை இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியத்துவமானதும், முதன்மையானதுமாகும்

இப் பேச்சு வார்த்தைக்கு யாழ்ப்பாணம் வந்த அரசாங்கப் பிரதிநிதிகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கமும் யாழ் மக்களும் அளித்த அன்பான வரவேற்பைப் பற்றி அறிந்த பிரதமர் சந்திரிக்காவும் அவரின் அரசும் பெரு மகிழ்ச்சி அடைந்தது இந்த மகத்தான வரவேற்பு இனப் பிரச்சனைக்கு சமாதானத் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்பதில் உள்ள ஆர்வத்தையே காட்டுகிறது. தமிழ் மக்களின் பெலவீனத்தையல்ல என்பதை சிறிலங்கா அரசு அறியவேண்டும். இது தமிழரின் இயல்பான நற்பண்பின் வடிவமேயாகும்.

தமிழ் மக்களின் வீர உணர்வை சிங்கள அரசுகள் இன்று புரியத் துவங்கியுள்ளது. தமிழரின் உரிமைப் பிரச்சனைகளுக்கு வன்முறை மூலம் தீர்வு காணமுடியாதென உணர்ந்திருக்கின்றனர் தமிழ்மக்கள் சமாதானத்தில் நாட்டம் கொண்டிருப்பது போல் தமது உரிமைகளை பெறுவதிலும் அதனைப் பாதுகாப்பதிலும் உறுதி பூண்டுள்ளனர் என்பதை உலக நாடுகளே அறியத் தொடங்கியிருக்கின்றன

நடைபெற்று முடிந்த, ஆரம்ப பேச்சு வார்த்தை முன்னேற்றகரமான நிலையில் நடைபெற்று முடிந்தது மகிழ்ச்சி. இப்பேச்சு வார்த்தை இருதரப்பினரும் சந்தித்துக் கொள்ள வழிவகுத்ததோடு—தொடர்ந்து நடைபெறவுள்ள பேச்சு வார்த்தைகளில் ஆராயப்பட வேண்டிய முக்கிய பிரச்சினையைக் கோடிட்டுக் காட்டியுள்ளது. எதிர்கால சமாதான முயற்சிகளுக்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க உதவும் என்பதில் ஐயமில்லை.

'நிரந்தர சமாதானத்தை அடைவதற்கு மேலும் நீண்டதூரம் செல்ல வேண்டும்.-என அரச தரப்புப் பிரதிநிதிகளில் ஒருவரான— இலங்கை வங்கித்தலைவர், திரு. இராஜன் ஆசீர்வாதம் கொழும்பில் தெரிவித்ததாக அறிகிறோம். இது உண்மையே! பிரதமர் சந்திரிக்காவின் இந்த முயற்சி நிறைவேறாமல் செய்வதற்கு அனேகர் தடையாயிருப்பதை நாம் அறிவோம். எனவே, முன்னைய பேச்சு வார்த்தைகளைப் போன்று இப்பேச்சு வார்த்தையும் முறிவடையாமல் இருப்பதற்கு—ஏனைய நாடுகளில் நடைபெறுவது போல, ஒரு நம்பகமான மத்தியஸ்தரை ஈடுபடுத்துவது நல்லதெனச் சில அரசியல் அவதானிகள் கருதுகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இஸ்ரவேல்—பலஸ்தீனப் பேச்சு வார்த்தை, வெற்றி கண்டதன் இரகசியம் என்ன? இப்பேச்சு வார்த்தை இரகசியமாக நடைபெற்ற போதிலும் நோர்வே என்ற சிறிய நாடு மூன்றாவது நபராக-திரை மறைவில் திறமாகச் செயற்பட்டதால் தான், பேச்சு வார்த்தை வெற்றியளித்தது எனக் கூறப்படுகிறது-இதனைப்பற்றி,இப்பேச்சு வார்த்தைகளில் ஈடுபடும் இருசாராரும் சிந்தித்து இறுதிக் கட்டப் பேச்சு வார்த்தையின் போதாவது நம்பகமான ஒரு மத்தியஸ்தரை ஈடுபடுத்துவது நல்லதென்பதே எமது கருத்தாகும்.

சின்னஞ்சிறிய நாடாகிய எமது நாட்டிற்கு, இதுவரை ஏற்பட்ட உயிர் இழப்புகள்-உடைமை சேதங்கள்-உளவியல் தாக்கங்கள் அதிகம். பல்லாயிரக் கணக்கான மக்கள் அகதிகளாக-இடம் பெயர்ந்தவர்களாக தவிப்பதை நா காண்கிறோம். ஆகவே, எங்களை எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளை மனதிருத்தி-இப்பிரச்சினைகள் சமாதானமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று, நமது சபைகள் விடாமல் இறைவனை இறைஞ்ச வேண்டும் என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறோம்.

## உங்களுக்குத் தெரியுமா?

(முன் தொடர்ச்சி)

ஜேம்ஸ் பாட்லி என்ற இம்மாலுமி கடலில் அமிழ்ந்து விட்டதாகக் கருதி அவனைத் தேடுவதை விட்டு விட்டுத் தாம்பிடித்த, (இறந்த) திமிங்கலத்தைத் துண்டிக்கும் வேளையில் ஈடுபட்டனர். அன்று பகல் முழுவதும் — இரவின் பெரும் பகுதியிலும் இவ்வேலையில் அயராமல் ஈடுபட்டு வந்தனர்.— இருந்தும், வேலை முடிவடையவில்லை எனவே அடுத்த, நாள் காலையில் அவ்வேலை தொடர்ந்து நடத்தப்பட்டது. அம்மீனின் மாபெரிய வயிற்றை மேல் தட்டில் உயர்த்தித் தூக்க முயலுகையில் — ஏதோ ஒன்று அதனுள் அசைவது போல் தோன்றியது. உடனே அதன் வயிற்றைக் கவனமாகக் கீறித் திறந்தனர்.

என்ன அதிசயம்! மரித்திருக்க வேண்டுமெனக் கருதப்பட்ட — காணாமல் போன — ஜேம்ஸ் பாட்லி என்ற அம்மாலுமியை அதனுள் கண்டனர். அவன் வெளியில் உயிருடன் வந்தான். திமிங்கில வயிற்றினுள் தான் போனதும் காரிருள் தன்னைச் சூழ்ந்து கொண்டதாகவும், ஒரு வழுவழுப்பான வழியில் தான் செல்வதை உணர்ந்ததாகவும் கூறினான். பின்னர் ஒரு நொடிப்பொழுதில் விசாலமான ஓர் இடம் அவனுக்குக் கிடைத்தது. இயல்பாக மூச்சுவிட முடிந்தது.

தன் நிலைமையை அவன் உணர்ந்ததும் பயங்கர அமைதியும் காரிருளும் அவனை மேற்கொண்டது. மயங்கி விழுந்தான் ஜேம்ஸ் பாட்லி திமிங்கிலத்தின் வயிற்றினுள் ஒருவன் பசியால் மரிக்க நேரிடுமேயன்றி – அவ்விசாலமான அறை போன்ற அந்த மீன் வயிற்றில் நல்ல சுகமாக வசிக்கக் கூடுமென நம்பினான் இம் மாலுமி.

இந்த விவரங்களை வைத்து நமது விவிலியத்தில் (வேதாகமத்தில்) உள்ள யோனாவின் கதையை மீண்டும் வாசியுங்கள்.

(Jeurnal des, Dabeys என்னும் பத்திரிகையின் ஆசிரியரும் – சிறந்த அறிஞருமான M.De Parville என்பவரால் இவ் வரலாறு சேர்க்கப்பட்டது – இவ் வரலாறு Literary Digest என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டுரையின் தமிழாக்கம்)

அருட்ஜோதி

✲

## பிரதம விருந்தினராகப் பேராயர்

கண்டிப் புனித அந்தோனியார் கல்லூரியின் தமிழ்க் கலா மன்றம் நடாத்திய "கலை விழா" 7-10-94 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

அதிலே நமது தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் வண.எஸ். ஜெபநேசன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். இந்தத் தமிழ்க் கலா மன்றத்தின் முதல் தலைவராக விளங்கிய பெருமையும் ஆயருக்குரியதே. இவ்விழாவில் கல்லூரியின் அதிபர் வண. தந்தை ஸ்ரீபன் ஏபிரகாம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார், அவர் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றிய சேவைக்கான பாராட்டு வைபவமும் நிகழ்ந்தது. ஆயர் அவர்கள் அதிபரை பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்

இவ் விழாவில் இசையரங்கு, நடனங்கள், நாடகங்கள் என்பன இடம் பெற்றது.

THE MORNING STAR

Diocesan Office, Vaddukoddai 21 . 10 . 1994

*EDITORIAL*

## Man's War Against Water

'Water, water everywhere but not a drop to drink' is an adage. Though 70./· of the earth's crust is composed of water, only 0.8·/. of this 70·/. is available as fresh water. Further, very high percentage of this 0.8·/. contains more dissolved solids than permissible according to WHO standards.

The glass of water in one's hand, even though is as clear as a crystal can be, need not be pure. Moreover, fresh water is fast depleting. One day the world will become devoid of pure drinking water. Therefore all the countries will have to spend colossal sum of money in setting up and maintaining desalination plants, complex water purification systems and water recycling plants for providing drinking water. Then water will become a dear commodity.

The importance of water is stressed in the first chapter of the first book in the Bible. 'The Spirit of God was moving over the face waters' (Gen 1 : 2). Water symbolizes The Holy Spirit. Jesus said "all who thirst come to me (Jn 7 : 36) I will give him living water" (Jn 4 : 10). Water is to physical life as Holy Spirit is to spiritual life; it is life giving and more than 70 /. of all living organisms is composed of water. Water is therefore essential for life.

Holy Spirit cleanses men of their sins. Water is used as a symbol of purification in rituals. It is also used to keep the body and clothes clean. Holy spirit convicts the world of sin and judgement, where as, water punishes the world-flood causes destruction and drought famine !

"Nature recedes where man exploits" so said L. J. D. Fernando, an eminent geologist of Sri Lanka once. Whenever man tries to go against nature, he wages war against nature. Nature in turn punishes him. There are many ways in which man is on a collision course with disaster. Deforestation, pollution through discharge of industrial refuse into rivers and seas, burial of radio active waste, and excessive use of fertilizers, weedicides and insecticides, urbanization, withdrawal of ground water much faster than replenishment, and careless handling are some of the ways by which man fights nature. This eventrally will lead to the complete destruction of man himself.

Instead of heeding to God's Commandment man started to plunder the earth and rape the nature. Man may bo ignorant or he in gready yet his actions are disastrous. Man should be made aware of this. Therefore 16th of October was declared "Environment protection Day" and this year's theme was 'water for life. The Church as the body of Christ, should play a big role in this respect.

Today, we see the perilous state of the world and we cannot simply sit and watch the slow death of the world. We are the watchmen for the world and it is our duty to give them the warning (Cf Ezek 33:7). "If I say to the wicked. O wicked man, you shall surely die and you don't speak to warn him to turn from his way, that wicked man shall die in his iniquity, but his blood will I require at your hand." (Ezek 33 ; 8).

God has no pleasure in the death of the wicked; but wants them to turn them from their ways and live (Egok 33:11).We must therefore exhort them to turn from their ways. Man has passed a death sentence on himself. One day he will realize and turn from his ways. This is our hope.

The last chapter of the last book of the Bible again talks of water: Then he showed me the river of the water of life, bright as crystal, flowing from the throne of God and of the Lamb......there shall no more be anything accursed" Rev. 22:13. Yes that is our vision for eschaton God will transform every thing. But He wants to do His transforming act through us. Let us therefore get involved in this transforming act so that potable water will be freely available to all.

### Dedicated Missionaries......

(Continued from last week)

He also published an English -Tamil dictionary of medical terms and also a good English -Tamil dictionary. His publications were prolific. In 1855 he started teaching in Tamil to the local Tamil students. Unfortunately this hearty trend could not be developed for want of government support, who at that time thought that the switch over to Tamil was suicidal to English The Manipay Hospital is stlll known as the "Manipay Green Hospital" in memory of this great man.

In sum, it has to be said that the American missionaries by the studies they provided, and by their precept. and own example of selfless dedication and integrity moulded into shape men and women of learning and character to be useful citizens of the country. Their whole-hearted service in the field of education as well as medicine continues to this day for which the people of Jaffna, most of them Hindus are deeply indebted

Before I conclude may I be permitted to refer to one little point which Rev. de Silva has stated in his article. He says that during the riots of 1916 Rev. Henry Highfield wrote a strangly worded letter to the secretary of state for the colonies, and that the arrested Sinhala leaders were released immediately as a result of that letter If such a letter was written it would certainly have had an impact. But written records show that the release was effected as a result of Sir Ponnampalam Ramanathan's efforts who had to cross the mine-infestad seas to England for that purpose

A leading English newspaper of that time "The Ceylonese", in its issue of February 21-1916 says that an unprecedented tumultuous welcome was accorded to Sir Ponnampalam on his arrival at the Colombo Jetty from England and that as mark of gratitude for his successful mission the horse was untied from the carriage which was meant to take him to his residence, and instead, " the carriage was drawn all the way by thirty members of the ( Reception ) Committee to his residence, at Ward Place.

### George Arney......

(Continued from page 1)

She further said that she is thinking of bringing about a " Ceasefire" and also opening Changupiddy Poonari route and if so may have to withdraw the army from Poonari

### Winds of Peace......

(Continued from page 1)

take place on the 24th of October in Jaffna during which possibility of holaing the Presidental election in Jaffna explored along with other matters. It is also reported that after the Presidential Election on the 9th of November, the 3rd stage of the Talks will take place when Prime Minister Chandirika will meet Mr. V. Prabakaran, Leader of the Liberation Tigers of Tamil Eelam.

As a gesture of good will Mr. V. Prabakaran had agreed to released the Captain of the battle ship sunk by the Sea Tigers at Kalpiti last month and six other Security personal kept in detention by the Tigers. The Sri Lankan Government in response has released 18 Tamils who were arrested on Suspision by the Army and Navy at different times and places either while they were fishing, or crossing Killaly or returning from India or when the army rounded up Karainagar.

### White Cane Day......

(Continued from page 1)

handicapped is the first year student in the student in the Arts Faculty of Jaffna University. He explained the meaning of White Cane and appraised the educational and employment status of the visually handicapped and exhorted the students to urge the society to uplift thes tatus of the visually handicapped.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka under No. Q/J/140/89. News Printed for the Jaffna Dioces of the Church of South India at the American Ceylon Mission Press. 182, 1st Cross Street, Jaffna on Friday the 21st of October 1994 and published by Mr. T. A. Tambiappa, Diocesan Office, Vaddukoddai.